# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன; அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அத அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை. (எசா 55:10-11)

# மனிதரையும், இயற்கையையும் பராமரிக்க நம்மை அர்ப்பணிப்போம்

## -திருத்தந்தை அழைப்பு

வத்திக்கான்: வலுவிழந்தோர், மற்றும், சமுதாயத்தில் பின்தங்கியோரை மையமாக வைத்து, நாம் இறைவன் துணையோடு உழைக்கும்போது, அனைத்து நிலைகளும் மேம்படும் என்ற உறுதியோடு செயல் படுவோம் என, கடந்த ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரையில் கூறியபின், தன் புத்தாண்டு வாழ்த்துக்களை மீண்டுமொரு முறை வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்த 2021-ஆம் ஆண்டு நமக்கு என்ன கொண்டுவரப்போகிறது என்பதை நாம் அறியாமல் இருக்கின்றபோதிலும், நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட நிலையிலும், ஒன்றாக இணைந்தும் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று கூறிய திருத்தந்தை, ஒவ்வொரு மனிதரையும், நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பேணிக்காக்க நம்மை அர்ப்பணிக்க எடுக்கும் முடிவதே அது, என்று கூறினார்.

கோவிட்-19 கொள்ளைநோயால் துன்புறும் மக்களைக் குறித்து எண்ணாமலும், இந்நோய் குறித்த கட்டுப்பாடுகளை மதிக்காமலும், அண்மைக் காலத்தில் பலர் தங்கள் விடுமுறைக் காலத்தை ஆடம்பரமாகக் கொண்டாடியது குறித்து தன் கவலையையும் வெளியிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.
மிகவும் துன்ப துயர நிலைகளோடு இப்புதிய ஆண்டை துவக்கியிருக்கும் மக்கள், நோயுற்றோர், வேலைவாய்ப்புகளின்றி துன்புறுவோர், ஒடுக்கப்பட்டோர், சுரண்டப் பட்டோர் என அனைத்து மக்களையும்



நினைவுகூர்ந்து, இவ்வேளையில், அவர்களுக்கு இவ்வாண்டு சிறப்பான ஆண்டாக அமைய தான் வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

குழந்தை பிறப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கும் குடும்பங்களுக்கு தான் நெருக்கமாக இருப்பதாகவும் உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிறப்பு என்பது எப்போதும் நம்பிக்கையின் வாக்குறுதி, எனக் கூறி தன் உரையை நிறைவுச் செய்தார்.

மேலும், மற்றொரு உரையில், பெத்லகேமில் ஆற்றியதைப்போல் இறைவன், நம் ஏழ்மையின் வழியாக பல அற்புதங்களை ஆற்ற விரும்புகிறார். நம் மீட்பு முழுவதையும், மாடடைக்குடிலில் வைத்த இறைவன், நம் ஏழ்மையைக் குறித்து அச்சம்கொள்ளவில்லை, ஆகவே, அதனை முழுமையாக மாற்றியமைக்க, இறைவனின் கருணையை அனுமதிப்போம், என்றும் மனிதகுலம் துன்பங்களில் சிக்கியபோது, அதற்கு அறிவுப்பூர்வமான விளக்கங்கள் தருவதற்குப் பதில், இறைவன், தன் ஒரே திருமகனை மனிதனாக நம்மிடையே அனுப்பியதே அவர் தரும் பதில் என்றும் திருத்தந்தை கூறினார்.

நல்ல சமாரியரைப்போல், இறைவனும், துன்புறும் மனிதரைக் கண்டதும், தன் இரக்கத்தைச் செயல்வடிவில் காட்டியுள் ளார் என்று, தன் சிந்தனையில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் கடந்த ஓராண்டளவாக சந்தித்த துன்பங்களுக்கு எவ்வகையில் பதிலளித் திருக்கிறோம் என்பதை சிந்திக்க வேண்டும் என்றார்.

எவ்வித விளம்பரம் இன்றி, இவ்வுலகில் பல்லாயிரம் பேர், தங்கள் உதவிக்கரத்தை நீட்டியதையும், பாரங்களால் துன்புற்றோரின் பாரங்களைக் குறைக்க முயற்சிகள் மேற்கொண்டதையும், திருத்தந்தை, தன் உரையில் குறிப்பிட்டு, அவர்களுக்கு நன்றி கூறினார்.

# தீபகற்ப மறைமாவட்டங்களின் 'கனி தரும் சீடத்துவம்' பொதுநிலையினர் அமைப்பு உருவானது

**கோலாலம்பூர்:** பொதுநிலையினரே திருஅவையின் முதுகெலும்பு என்று எண்ணப்பட்டு வந்த காலம் உண்டு. ஆனாலும் அதற்கான தயாரிப்புக்கள் அவ்வப்போது ஆங்காங்கே தொடங்கப் பட்டு, நீறு பூத்த நெருப்பாக இருந்து கொண்டிருந்ததை அறிவோம். இதனால், பொதுநிலையினர் ஆற்றவேண்டிய பல பணிகள் வெகுவாக தேக்கமும் முடக்கமும் கண்டன. இதனிமித்தம் திருஅவை அதன் தளர்ச்சியில் மூழ்கிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

இதனிமித்தம் கடந்த ஆண்டு தொடக் கத்தில் பொதுயிலையினரின் நிலைகுறித்து ஒருசில மூத்த பொதுநிலையினர் சிந்திக்கத் தொடங்கினர். இதன் விளைவாக பினாங்கு மறைமாவட்ட ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களோடு தொடர்புகொண்டு பேசினார் சகோ. செல்வராஜ் (மலாக்கா) அவர்கள். ஆயரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் பொதுநிலையினரின் வளர்ச்சி மற்றும் ஈடுபாடு குறித்து மேலும் ஆராய்ந்தறிந்து ஆவன செய்ய ஆயர் ஆலோசனை கூறினார்.

இதனையொட்டி ஒரு வெள்ளோட்டப் பொதுக்கூட்டம் கோலாலம்பூர், பீல் சாலையில் உள்ள திருஇருதய ஆண்டவர் ஆலய மண்படத்தல் ஏற்பாடு செய்யப் பட்டது. இதில் 48 பொதுநிலையினர் கலந்துகொண்டனர். அருள்தந்தை அருள்நாதன் ஜோசப் அவர்கள் ஆயரின் பிரதிநிதியாகக் கலந்து கருத்துரைத்தார். இதன் தொடர்பாக, மூன்று மறை மாவட்டங்ளையும் பிரதிநிதித்து 15 பேர் கொண்ட செயற்குழு உருவாக்கப்பட்டது. பின்னர், **'கனி தரும் சீடத்துவம்'** என்ற பெயர் இப்பொது நிலையினர் பேரவைக்குச் சூட்டப்பட்டது.

தொடரந்து, கூலிம், திருஇருதய ஆண்டவர் பங்குத்தந்தை Msgr ஹென்றி ராஜூ அவர்கள் இக்குழுவின் ஆன்மீக ஆலோச கராக ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களால் நியமனம் பெற்றார்.

சில மாதங்கள் zoom வழியாக நடத்தப்பட்ட கூட்டங்களின் பலனாக, கடந்த 03-01-2021, ஞாயிற்றுக்கிழமையன்று பொதுநிலையினருக்கான முதல் உருவாக் கப்பயிற்சி நடத்தப்பட்டது. இம்மாதம் தொடக்கம் ஒவ்வொரு மாதமும் இருமுறை, ஓராண்டு காலத்திற்கு இப்பயிற்சிகள் நடைபெற முடிவெடுக்கப்பட்டுள்ளது. 12 அருள்தந்தையர்கள் இப்பயிற்சிகளைப் பொறுப்பேற்று நடத்த ஒப்புதல் அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 03-01-2021 அன்று நடைபெற்ற முதல் உருவாக்கப் பயிற்சியை அருள்தந்தை சிரில் மண்ணாயகம் அவர்கள் 'கிறிஸ்தவர் யார்?' என்ற தலைப்பில் வழங்கினார். ஏறக்குறைய 90 நிமிடங்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் சீடத்துவத்தின் தன்மையை திருவிவிலியத்தின் அடிப்படையில் தெளி வாக எடுத்துரைத்தார். அடுத்து மூன்றாவது ஞாயிறன்று இப்பயிற்சியின் இரண்டாவது பகுதி இடம்பெறும். இப்பயிற்சியில் பங்கேற்கும் ஒவ்வொருவரும், பயிற்சியில்



*அருள்தந்தை சிரில் மண்ணாயகம்*

கற்றுக்கொண்டதை மேலும் இருவருக்கு கற்றுத்தர வேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும்.

*-ஆர்.கே.*

# நம்பிக்கையுடன் 2021-ஆம் ஆண்டை நோக்கி நடைபோடுவோம்

**வத்திக்கான்:** 2020-ஆம் ஆண்டின் வேதனைகள், துயரங்கள், மற்றும், கண்ணீரையும் தாண்டி, நம்பிக்கையுடன் 2021-ஆம் ஆண்டை நோக்கி நடைபோடுவோம் என்ற அழைப்புடன், தன் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தலைமைப் பொதுச்செயலர் அந்தோனியோ கூட்டேரஸ்.

ஒரு புதிய ஆண்டு முன்னிற்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தட்ப வெப்ப நிலை மாற்றம், கோவிட்-19 கொள்ளைநோய் போன்றவைகளால் எழுந்துள்ள நெருக்கடிகள், அனைவரும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டியதன் தேவையை நமக்கு உணர்த்தியுள்ளன என்பதையும் தன் செய்தியில் குறிப்பிட்டுள்




*இளையோருடன், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தலைமைப் பொதுச்செயலர்*

இவ்வுலகின் பல்வேறு பகுதிகளின் மக்களால் வெளிப்படுத்தப்பட்டுவரும் இரக்கச் செயல்கள், முன்னணியில் நின்று பணியாற்றுவோர், விரைவில் தடுப்பூசியை கண்டுபிடித்த அறிவியலாளர்கள், சுற்றுச்சூழலை பாதுகாக்க உழைப்போர், என அனைவரையும் தன் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் பாராட்டியுள்ள கூட்டேரஸ் அவர்கள், மக்களிடையே காணப்படும் ஒன்றிப்பும் ஒருமைப்பாடும் நம்பிக்கையின் கதிர்களாக உள்ளன எனவும் கூறியுள்ளார்.

நோய் மற்றும் மரணத்தின் அலைகளை உருவாக்கிவரும் கொள்ளைநோய் காலத்தில், ஏழ்மை, சரிநிகரற்ற தன்மை, பட்டினி, வேலையின்மை, கடன் அதிகரிப்பு, குழந்தைகளின் துயர், வீடுகளில் வன்முறை, மற்றும், பாதுகாப்பின்மைகள் பெருகி வருவதையும் குறிப்பிடும் ஐ.நா. பொதுச்செயலர், நம்பிக்கையுடன் கூடிய ளார் ஐ.நா. பொதுச்செயலர்.

அமைதி என்பது, மனிதர்களுக்கிடையே மட்டுமல்ல, மனிதர்களுக்கும் இயற் கைக்கும் இடையேயும் இடம்பெற வேண்டியது அவசியம் எனக்கூறும் ஐ.நா. பொதுச்செயலரின் அறிக்கை, இவ்வுலகை குணப்படுத்த மனித சமுதாயம் ஆற்றவேண்டிய நடவடிக்கைகளையும் வலியுறுத்தியுள்ளது.

பிறந்துள்ள 2021-ஆம் ஆண்டு மகிழ்வும் நிறைந்த ஓர் ஆண்டாக அனைவருக்கும் விடியட்டும் என்ற வாழ்த்துடன், தன் புத்தாண்டு செய்தியை நிறைவுசெய்துள்ளார் கூட்டேரஸ். (UN)

*-கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்*

# திருஅவையில் மேலும் 8 பேர், புனிதர்களாக, அருளாளர்களாக பிரகடணம்

**வத்திக்கான்**: புனிதர் மற்றும் அருளாளர் களாக உயர்த்தப்படும் வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் பேராயத்தின் தலைவர், கர்தினால் மார்செல்லோ செமெராரோ (Marcello Semeraro) அவர்கள், டிசம்பர் 21, அன்று, திருத்தந்தையைச் சந்தித்து, 7 இறையடியார்கள், மற்றும், இத்தாலியில் மறைசாட்சியாகக் கொல்லப்பட்ட ஒருவரின் வாழ்வு குறித்த சிறப்பு விவரங்களை சமர்ப்பித்தார்.

இத்தாலியின் Canicattì எனுமிடத்தில் 1952-ஆம் ஆண்டு பிறந்த பொது நிலையினரான Rosario Angelo Livatino அவர்கள், 1990-ஆம் ஆண்டு, இத்தாலியின் Canicattì மற்றும் Agrigento என்ற ஊர்களுக்கு இடைப்பட்ட சாலையில், விசுவாசத்திற்காக மறைசாட்சியாக கொல்லப்பட்டது குறித்த விவரங்கள், திருத்தந்தையின் முன்னைலையில் சமர்ப்பிக்கப்பட்டன.

இஸ்பெயினில் 1470-ஆம் ஆண்டு பிறந்து, 1565-ல் மெக்சிகோவில் உயிரிழந்த இறையடியார், ஆயர் Vasco de Quiroga, இத்தாலியில் 1905ம் ஆண்டு பிறந்து 1984ம் ஆண்டு உயிரிழந்த இறையடியார், மரியின் ஊழியர் துறவு சபையைச் சேர்ந்த ஆயர் Bernardino Piccinelli, இஸ்பெயினில் 1817-ஆம் ஆண்டு பிறந்து, 1851ல் உயிரிழந்த இறையடியார், மறைமாவட்ட அருள்தந்தை Antonio Vincenzo Gonzlez Surez, ஜெர்மனியில் 1906ம் ஆண்டு பிறந்து 1945-ஆம் ஆண்டு உயிரிழந்த இறையடியார், அருள்தந்தை Antonio Seghezzi, 1932-ஆம் ஆண்டு இத்தாலியில் பிறந்து 2002-ஆம் ஆண்டு Kazakhstan நாட்டில் உயிரிழந்த இறையடியார், மறைமாவட்ட அருள்தந்தை Bernardo Antonini, இன்றைய போலந்து பகுதியில் 1869-ஆம் ஆண்டு பிறந்து, 1953-ஆம் ஆண்டு செக் குடியரசுப்பகுதியில் உயிரிழந்த பிரான்சிஸ் சேல்ஸ் துறவுசபையின் இறையடியார், அருள்தந்தை Dio Ignazio Stuchly, இத்தாலியில் 1954-ல் பிறந்து, 1974-ல் உயிரிழந்த இறையடியார், அருள்சகோதரி Rosa Staltari ஆகிய இறையடியார்கள் குறித்த விவரங்களும் திருத்தந்தையிடம் சமர்ப்பிக் கப்பட்டு, அவர்களை, அருளாளர்களாக உயர்த்தும் வழிமுறைகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

*-கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்*

# திருத்தந்தையின் பொன்மொழிகள்

**"குழந்தை இயேசுவில், கடவுள், தம்மையே அன்புள்ளவராக, நன்மைத்தனம் நிறைந்தவராக, மற்றும், கருணையுள்ளவராக, வெளிப்படுத்துகிறார், இத்தகைய ஒரு கடவுளை, நம் முழு இதயத்தோடு, உண்மையாகவே அன்புகூரவேண்டும்"**

**"ஓர் உயிரை கருவில் தாங்கி, பேணி வளர்த்து, பெற்றெடுப்பதில் பெரும் பொறுமையை வெளிப்படுத்தும் பெண்கள் வழியே, இவ்வுலகம், தன் எதிர்காலத்தை பெற்றெடுக்கிறது"**

**"நாம் அனைவரும், உடன்பிறந்த உணர்வு கொண்டு ஒரே குடும்பத்தை அமைக்கும் கனவு காண்போம்"**

# நமது திருமுழுக்கு கடவுளின் திருவுளத்திற்கு அழைப்பு

இன்று நாம் ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்குப் பெருவிழாவைக் கொண்டாடு கிறோம். யோர்தான் ஆற்றங்கரையில் இயேசு திருமுழுக்குப் பெற்றார் என்று சொல்லும்போது அவர் மானுட மீட்புக்காக பாடுகளையும், துன்பங்களையும், சிலுவை களையும் ஏற்கத் துணிந்துவிட்டார் என்றும் நாம் பொருள் எடுத்துக்கொள்ளலாம்.

"இன்றைய முதல் வாசகத்தில், இறைவன், "நம் எண்ணங்கள் உங்கள்; எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல" என்கிறார். இதன் பொருள் அறிந்து செயல்படுவது இன்றியமையாதது. எப்பொழுதும் கடவுளின் திருவுளம் நம்மில் நிறைவேறுவதை எப்பொழுதும் உறுதிசெய்து வாழ வேண்டும் என்று இன்று நினைவூட்டப்படுகிறோம்.

மேலும், இயேசு, யோவானிடமிருந்து பெற்ற திருமுழுக்கை பாவம் போக்கும் சடங்காகப் பார்க்காமல், அவர் மக்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு நிகழ்வாக பார்க்கவேண்டும். அப்போதுதான் நாம் இயேசு யோவானிடமிருந்து பெற்ற திருமுழுக்கின் அர்த்தத்தை உணர்ந்துகொள்ள முடியும்.

இயேசு, யோவானிடமிருந்து பெற்ற திருமுழுக்கு அவர் மக்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட ஒரு நிகழ்வாக நாம் பார்க்கக்கூடிய அதே வேளையில், இயேசு பெற்ற திருமுழுக்கை அவருடைய பணிவாழ்வின் தொடக்கமாக நாம் புரிந்துகொள்ளவேண்டும். இயேசு திருமுழுக்குப் பெற்ற பிறகு இறையாட்சிப் பணியை செய்யத் தொடங்குகின்றார்;

ஆகவே, ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழாவைக் கொண்டாடும் இந்த வேளையில் நாம் இயேசுவைப் போன்று தந்தைக் கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவருடைய திருவுளத்தை நிறைவேற்றி வாழ தீர்மானம் எடுப்பது கடவுளைப் பூரிப்படையச் செய்யும்.

அடுத்து இக்காலக்கட்டத்தில் நம்முடைய திருமுழுக்கை மனத்திலே கொண்டு, நம்மை புதுப்பித்துக் கொண்டு, இறை பிள்ளைகளாகவும், திருஅவையின் உறுப்பினராகவும், பாவத்திற்கு விடுதலைப் பெற்றவராகவும் வாழ உறுதி கொண்டவர்களாக வாழ நாம் மாற்றுவழி காண வேண்டும்.

மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன; அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்ப வனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை.என்று இறைவாக்கினர் எசாயா கூறுவதை மனதில் நிறுத்தி, நாம் பெற்ற திருமுழுக்கினால் கண்ட அருள் வாழ்வால் இப்புவியில் பலன் தரும் மக்களாக வாழ முற்படுவோம்.

*- ஆவி. டேவிட், குளுவாங்*

**ஆண்டவரின் திருமுழுக்கு**
எசா 55: 1-11
எசா 12: 2-3. 4. 5-6
1 யோவான் 5: 1-9
மாற்கு 1: 7-11
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : விழா**

## அடுத்த வாரம் வாசிக்கத் தவறாதீர்!

**எதிர்வரும் ஜனவரி 28, அன்று கிள்ளான், புனித லூர்து அன்னை பங்கில் தமது குருத்துவ அருள்பொழிவை ஏற்கவுள்ள திருத்தொண்டர் அருள்திரு பொனவெஞ்சர் இராயப்பன் அவர்களுடனான நேர்க்காணல் இடம் பெறும். வாசிக்கவும் அவருக்காக இறைவேண்டல் செய்யவும் வேண்டுகிறோம்.**

**நினைவில் கொள்வோம்**

**24-01-2021**
**இறைவார்த்தை ஞாயிறு**
**31-01-2021**
**மறைக்கல்வி ஞாயிறு**